# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of criminal procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.63/2024

Name : சுமதி க/பெ சத்தியமூர்த்தி(PW3)
Date: 12.03.2026.
எதிரி ஆஜர்
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால், இரவு 9.00 மணிமேல் நடந்தது. பிரச்சனை நடந்தபோது எனது உடல்நிலை சரியில்லமால் எனது அம்மா வீட்டில் இருந்தபோது கேட்டை எனது அப்பா திறக்க முயற்சித்த போது எனது அண்ணன் மனைவி தலையில் அடித்துவிட்டாா. எனக்கு வீட்டை எழுதி கொடுக்க சொல்லி எனக்கு கொடுக்கததால் பொய்யாக எதிரி மீது பொய் புகார் கொடுத்த காரணமாக அதற்கு ஆதராவாக என் தந்தை மற்றும் அப்பாவுக்கு ஆதராவாக பொய் சாட்சியம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of criminal procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.63/2024

Name : சத்தியவாணி க/பெ சுப்ரமணி (PW2)
Date: 12.03.2026.
எதிரி ஆஜர்
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால், இரவு 10.00 மணிமேல் நடந்தது. வீட்டிற்குள் தான் வழக்கு சம்பவம் நடந்தா என்றால், வீட்டின் கேட்டை எனது கணவர் திறப்பதற்குள் வெளியே இருந்து எனது மருமகள் பெரிய கல்லால் என் கணவரின் தலையை எதிரி அடித்தார். சம்பவ சமயத்தில் எங்கு இருந்தேன் என்றால் நான் வீட்டிற்குள் சமையல் செய்து கொண்டு இருந்தேன், சத்தம் கேட்டு வெளியே வந்தபோது எனது கணவர் கேட்டிற்கு வெளியே விழுந்து மயக்கம் போட்டு இருந்தார். சம்பவத்தின் போது எனது மகள், எனது பேரன் எல்லாரும் இருந்தோம். எனது பேரன் தான் சண்டை விலக்கிவிட்டான். சம்பவத்தின்போது கூட்டமாக வந்தார்கள் என்றால், இரவு 10 மணிக்கு மேல் ஆகிவிட்டதால் 2,3 பேர்தான் வந்தார்கள். எனது மகளுக்கு சொத்தை எழுதிகொடுக்க மருமகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது மருமகன் அங்கு இருந்தார் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.